THE HON. SRI R. VENKATARAMAN : (a) The scheme is under investigation.

(b) Does not arise.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : ஹொகனேக்கல்லில் புதிய அணை கட்டுவது சம்பந்தமாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடந்த ஸோனல் கௌன்ஸில் கூட்டத்தில் மைசூர் அமைச்சர்களோடு பேசப்பட்டதா ? அப்படியானால் அவர்கள் கூறிய பதில் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக ஸோனல் கௌன்ஸிலில் நடைபெற்ற விஷயங்களை வெளியிடுவதில்லை. அதில் அமைச்சர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பதைச் சொல்வதில்லை. முடிவுகளைத்தான் சொல்வது வழக்கம். இன்னும் லேட்டஸ்ட் இன்பர்மேஷன் கொடுக்க முடியும். ஜூன் மாதம் 22-ம் தேதி 1962-ல் ஸதர்ண் ஸோனல் கௌன்ஸிலில் பவர் டெவலப்மென்ட் கமிட்டிக் கூட்டத்தில் இருதரப்பு சீப் எஞ்ஜினியர்களும் இதை கூட்டாக பரிசீலனை செய்வது, 'ஜாயின்ட் இன்வெஸ்டிகேஷன்' என்று முடிவு எடுக்கப்பட்டது.

பஸ்களின் வேகத்தை அதிகரித்தல்

* 152 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களின் வேகத்தை அதிகரித்து ஓடும் நேரத்தைக் குறைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. This involves amendment to VIII Schedule to the Motor Vehicles Act, 1939. The question of amending the Schedule is under consideration.

உருளைக்கிழங்கு பயிரிடுதல்

* 153 கேள்வி.—திரு. டி. கர்ச்சா கவுடர் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் உருளைக்கிழங்கிற்கு ஏற்பட்ட 'late blight' என்ற நோயை ஒழிக்க ஸ்காட்லந்திலிருந்து அழைக்கப்பட்ட பிளாக் என்ற நிபுணர் என்னென்ன நோய் தடுப்பு முறைகளை சிபாரிசு செய்தார் ?

(இ) அம்முறைகள் கையாளப்பட்டனவா ?

(உ) அப்படியானால், பலன் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) The preventive measures suggested by Dr. William Black were :

(i) Regular prophylactic spraying with copper fungicides and adopting field sanitation practices, and

(ii) Import of certified ' Great Scot ' variety of potato from the United Kingdom for multiplication and supply to the farmers.

(b) Yes, Sir.

(c) The disease was brought under control.

திரு. டி. கார்ச்சா கவுடர் : 1961-ல் ஏற்பட்ட கருகல் நோயினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்க்காரால் நியமிக்கப்பட்ட ரெவன்யூ போர்ட் அங்கத்தினர் அவர்கள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள எல்லா சர்க்கார் கடன் வசூலையும் ஒத்திவைக்கும்படி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்களா ? அதன்பேரில் அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதையெல்லாம் பரிசிலனை செய்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. ஜெ. மாதா கவுடர் : நமக்கு வருடத்திற்கு 8,000 டன் உருளைக் கிழங்கு விதை நீலகிரிக்கு மட்டும் தேவையாக இருக்கிறது. சர்க்கார் வாங்கி இருப்பது 50 டன். மீதியை தனிப்பட்டவர்கள் இறக்குமதி செய்ய முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதற்கு லைசென்ஸ் கொடுத்து உருளைக்கிழங்கு விதைகளை வெளி நாடுகளில் இருந்து தருவிக்க முயற்சி எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஜாஸ்தி உருளைக்கிழங்கு விதை வாங்க அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியது. அவர்கள் ஓரளவு 'பாரின் எக்ஸ்சேஞ்ஜ்' கொடுத்தார்கள். கிடைத்தது சொற்பந்தான். கிடைத்ததை ' உருளைக்கிழங்கு விதைப் பண்ணை ' யில் போட்டு விதையை அதிகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. "யூ. கே."-ல் தனிப்பட்ட நபர்களிடம் ஒப்பந்தம் செய்து அவர்கள் மூலம் பெறவும் ஏற்பாடு செய்ய மத்திய அரசாங்கத்தை கேட்டிருக்கிறோம். பதில் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த உருளைக்கிழங்கு கருகல் நோய்க்கு ஸ்ப்ரே செய்ய டைத்தேன் என்ற பூச்சி கொல்லும் மருந்தை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால் இந்த ஆண்டும் அந்த நோய் பெரும் அளவில் பரவி இருப்பதால் இந்த பூச்சி கொல்லும் மருந்து கிடைக்காமல் விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த பூச்சி கொல்லும் மருந்தை உடனடியாக தருவிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : டைத்தேன் மருந்து கிடைக்க எவ்வளவு தூரம் முயற்சி எடுக்கவேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்தது. அது போதிய அளவு கிடைக்காததால் அதிகமாக வாங்கி கொடுக்க முடியவில்லை. மேலும் அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. ஜெ. மாதா கவுடர் : கிடைத்திருக்கும் 50 டன் விதையை சர்க்கார் பண்ணையில் போட்டு விதையை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்தால் ஆண்டுக்கு 250 டன்னுக்கு மேல் விதையை எதிர் பார்க்கமுடியாத நிலைதான் இருக்கிறது. அவ்வளவுதான் கிடைக்கும். ஆனால் தேவை 8,000 டன் இருப்பதால் சர்க்கார் முன்வந்து

விதை தயார் செய்வதோடு, தனிப்பட்டவர்கள் அதைத் தருவிக்கத் தயாராயிருந்தால் அவர்களுக்கு பெர்மிட் வழங்க முயற்சி செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : கிரேட் ஸ்காட் உருளைக்கிழங்கு விதை கிடைக்காததால் அதிகப்படி வரவழைக்க முடியவில்லை. பாரத நாட்டுப் பகுதிகளில் இருந்து அதிகப்படி விதை கொடுத்து உதவி செய்யலாம் என்று இருக்கிறது. ஆனல் க்ரேட் ஸ்காட்தான் விவசாயிகள் வேண்டுவது. அதை மீண்டும் அதிகப்படியாக வரவழைத்துக் கொடுக்கக் கேட்டிருக்கிறோம் மத்திய சர்க்காரை, அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகமாக கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் இன்னும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

ஆண்டிப்பட்டி பிராந்திய அபிவிருத்தி (மதுரை)

* 155 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் (திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்களின் சார்பாக) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுகாவிலுள்ள ஆண்டிப்பட்டி பிராந்தியத்தில் அபிவிருத்திக்காக சென்ற ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது?

(இ) இவ்வாண்டு எவ்வளவு ஒதுக்க உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) An allotment of Rs. 2,11,477 for 1961–62 and an allotment of Rs. 2,01,524 for 1962–63 have been made for Andipatti Block for Village Works, Agricultural Development, loans distribution and social education.

பாலங்கள் கட்டுதல்

* 158 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஏரலின் அருகிலும், சேரன் மகாதேவியிலும் தாம்பிரபரணிக்கு குறுக்கே புதுப்பாலங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டதா ?

(இ) வேலை எப்போது தொடங்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Bridge near Eral : No, Sir.

Causeway at Shermadevi : Yes, Sir.

(b) Bridge near Eral : After technical sanction of the Estimates.

Causeway at Shermadevi : Being started.

SRI M. S. SELVARAJAN : Sir, may I know the estimated cost of the works?